285—

பெரம்பலூர் வட்டத்தில் ஆட்கொல்லி நோயினால் குழந்தைகள் இறப்பு

35922—* **டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், மேட்டூரில் ஆட்கொல்லி நோயினால் பல குழந்தைகள் இறந்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் தாலுக்கா, மேட்டூர் கிராமத்தில் 25-1-1994 முதல் 22-3-1994 வரை 8 குழந்தைகள் இறந்ததையடுத்து மருத்துவக் குழு சுகாதாரப் பணியாளர்களுடன் கிராமத்தில் பார்வையிட்டு தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்தது. பிரேதப் பரிசோதனைக்குப்பின் இக்குழந்தைகள் இறப்பதற்கான காரணம் வைரஸ் இன்பெக்ஷன் என்று முடிவெடுக்கப்பட்டது.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். கடந்த ஆண்டு இந்தச் சம்பவம் நடந்தது. அந்தக் குழந்தைகளின் ரத்தத்தைப் பரிசோதனைக்காக பம்பாய்க்கும் வேலூருக்கும் அனுப்பியுள்ளார்கள். இதுவரை வைராலஜி ரிப்போர்ட் கிடைக்கவில்லை. வைராலஜி ரிப்போர்ட் கிடைத்தால் இனி வருங்காலங்களில் இந்த வைராலஜி ஃபீவர் வராமல் தடுக்கமுடியும். ஆகவே அது விரைவில் கிடைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதே சமயம் அந்த போஸ்ட் மார்ட்டெம் ரிப்போர்ட்டில் ஏதாவது பாய்சனிங் காரணமாக இந்தக் குழந்தைகள் இறந்திருக்கின்றனவா என்பதையும் அறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஏற்கனவே நான் டிமாண்டிலே சொல்கிறபோது விளக்கமாக அந்தப் பிரச்சினை பற்றி நான் தெரிவித்தேன். இது வைரஸ் நோயால் பாதிக்கப்படுகிறது. இந்தக் காரணத்தினால்தான் அங்கே குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று சொல்லி மருத்துவ ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு தடுப்பூசி போட வேண்டுமென்று முடிவெடுத்து அங்கே 17,355 பேர்களுக்கு நாம் தடுப்பூசி போட்டிருக்கிறோம். வருகிற ஆண்டு எந்தெந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட நோய் தாக்குகிறது என்று கணக்கெடுத்து அந்த அனைத்துப் பகுதிகளிலேயும் இந்த தடுப்பூசியைப் போடலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நம் ரிப்போர்ட் நமக்கு சரியாக இருக்கின்ற காரணத்தினால் புதிதாக ரிப்போர்ட் பெறுவதற்கான பெரிய முயற்சி தேவையில்லை. இருந்தாலுங்கூட கூடுதலான விவரங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்குமானால் அந்த ரிப்போர்ட்டையும் பெறுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் பிறகு அந்த வைரஸ் ஃபீவர் மறுபடியும் அந்தப் பகுதியில் வரவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வைராலஜி ரிப்போர்ட் உடனடியாக கிடைக்கப்பெற்றால், என்னவிதமான வைரஸ் என்று அறிய ஏதுவாக இருக்கும். மீண்டும் அதற்குரிய தடுப்பூசியைப் போடுவதற்கும் அது உறுதுணையாக இருக்கும். ஆகவே அந்த வைராலஜி ரிப்போர்ட் விரைவாகக் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய லேப்-லேயே நமக்குக் கிடைத்த அந்தத் தகவலை வைத்துத்தான் என்ன தடுப்பூசி போடுவது என்று முடிவெடுத்து இப்போது தடுப்பூசி போட்டு இருக்கிறோம். குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் இந்த மாதங்களிலேதான் இந்த நோய் அதிகமாகப் பாதிக்கிறது. எனவே அந்த நடவடிக்கை எடுப்பதற்காக இப்போது எல்லா இடங்களிலேயும் இருக்கின்ற குழந்தைகளுக்கு--அந்தப் பகுதியில் இருக்கின்ற குழந்தைகள் அனைவருக்கும் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த ரிப்போர்ட்டைப் பெறுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

[1995 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. செழியன்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் என்னுடைய தொகுதியில் அடங்கிய அ. மேட்டூரில் நடைபெற்றது. அப்போது மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சிறப்பு மருத்துவக் குழுவை அனுப்பி வைத்து அவசர உடனடி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்கள். நானும் அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் சார்பாக அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கு புரட்சித் தலைவியின் சார்பாக ஆறுதல் சொல்லிவந்தேன். எனவே இதுபோன்ற நோய் வராமல் இருப்பதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க முடியுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக இது தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருந்திருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாம் எடுத்திருந்தாலும்கூட எதிர்பார்த்த அளவிற்கு வெற்றிபெறவில்லை. அப்படி இருந்தும் சில இழப்புகள் அங்கே நேர்ந்துவிட்டன. ஆனால் இந்த ஆண்டு முன்கூட்டியே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஏற்கனவே அறிவித்திருக்கிறேன். அதற்கான திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவையான மருந்துகள் இப்போது தரப்படுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து இருக்கிறோம். அங்கே இருக்கின்ற அத்துணை குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடுவது என்றும், அதே போல தொடர்ந்து கொசு ஒழிப்பதற்கான நடவடிக்கை மற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது என்றும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற பன்றிகளை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுப்பது என்றும் ஆகிய இப்படிப்பட்ட அனைத்து நடவடிக்கைகளை ஒருசேர எடுக்க அரசாங்கம் அனைத்து திட்டங்களையும் வகுத்து வைத்து இருக்கிறது. இந்த ஆண்டு விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஒரு கேள்விதான்.

வினா எண் 286. திரு. சா. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் 287, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.